சுருக்கம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – புதிய வகை உணவு வகைகளை தயாரிக்க கலவை இயந்திரங்கள் (Mixies) கொள்முதல் செய்து வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி–1) துறை,

அரசாணை (நிலை)எண்.37

நாள். 20–03–2013.
திருவள்ளுவர் ஆண்டு 2044.
பங்குனி 7ம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.267, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி–1) துறை, நாள். 02–11–2012.

மேலும் படிக்கவும்

2. சமூக நல இயக்குநரின் கடித எண். 39928/சஉதி(தி1)12, நாள் 21–12–2012.
3. முதன்மைச் செயலாளர்/சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம், கடித எண். 17912/சஉதி/12 நாள். 24–12–2012.

-----

ஆணை:-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழும் சத்துணவு பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2011–2012ல் கணிசமாக குறைந்ததை அரசு அக்கறையுடன் கருதி, சத்துணவு திட்டத்திற்கு மேலும் குழந்தைகளை ஈர்க்க பல்வேறு வழிவகைகளை ஆராய்ந்தது.

2) அதன்படி, 02–11–2012ல் தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளில் விதி 110ன்படி சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர், சத்துணவு மையங்களில் பின்வரும் விவரப்படி புதிய வகை உணவுகள் அறிமுகப்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்:-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்.

முதல் வாரம் மற்றும் மூன்றாவது வாரம்:-

| | |
|---|---|
| திங்கள் கிழமை | வெஜிடபிள் பிரியாணி (ம) மிளகு முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்பு கொண்டை கடலை புலாவ் (ம) தக்காளி மசாலா முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் (ம) மிளகு முட்டை |
| வியாழன் கிழமை | சாம்பார் சாதம் (ம) வேகவைத்த முட்டை |
| வெள்ளி கிழமை | கறிவேப்பிலை சாதம்/கீரை சாதம் (ம) மசாலா முட்டை (ம) மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு |

இரண்டாவது வாரம் மற்றும் நான்காவது வாரம்:-

| | |
|---|---|
| திங்கள் கிழமை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்)+ வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | மீல் மேக்கர் (ம) காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை | புளி சாதம் + தக்காளி மசாலா முட்டை |
| வியாழன் கிழமை | எலுமிச்சை சாதம் + சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளி கிழமை | சாதம் + காய்கறியுடன் சாம்பார் + வேக வைத்த முட்டை (ம) வறுத்த உருளைக்கிழங்கு |

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

| நாள் | உத்தேகிக்கப்பட்ட உணவு வகை |
|---|---|
| திங்கள் கிழமை | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் கிழமை | கலவை சாதம் + கொண்டைக்கடலை/பச்சை பயறு |
| புதன் கிழமை | வெஜிடபிள் புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் கிழமை | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி கிழமை | பருப்பு சாதம் + உருளைக்கிழங்கு |
| சனிகிழமை | கலவை சாதம் |
| ஞாயிற்றுகிழமை | கலவை சாதம் |

3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மேற்படி புதிய வகை உணவுகளை சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தை நல மையங்களில் அறிமுகப்படுத்துவதற்கு மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, அனைத்து சத்துணவு பயனாளிகளுக்கும் புதிய வகை உணவுகளான வெஜிடெபிள் பிரியாணி,

ருப்பு கொண்டை கடலை புலவு, தக்காளி சாதம், சாம்பார் சாதம், கருவேப்பிலை சாதம் மற்றும் கீரை சாதங்களுடன் மசாலா கலந்த முட்டை, மிளகு முட்டை ஆகியவைகளைத் தயாரிப்பது குறித்து செயல்முறை பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று சமூக நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) மேலும், சத்துணவு மையங்களில் குறைந்தது 100 முதல் 500 க்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு கலவை சாதங்கள் தயாரிக்க, இஞ்சி/பூண்டு அரவை, உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, காய்ந்த மிளகாய், பெருங்காயம் மற்றும் கருவேப்பிலை ஆகியவற்றை வறுத்து பொடி செய்து கலவை சாதங்களுடன் கலந்து தயாரிக்க வேண்டியுள்ளது எனவும், இஞ்சி/பூண்டு விழுதினை அரைக்க ஒவ்வொரு மையத்திலும் அம்மி அல்லது ஆட்டுரல் வசதி ஏதும் இல்லை எனவும், மேலும், கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு, துவரம்பருப்பு, காய்ந்த மிளகாய் ஆகியவற்றை வறுத்து பொடி செய்ய ஒவ்வொரு முறையும் அருகிலுள்ள மாவு அரவை மில்களுக்கு செல்வது இயலாது என்பதால் ஒவ்வொரு மையத்திற்கும் கலவை இயந்திரம் (மிக்சி) இருப்பது அத்தியாவசிய தேவையாக உள்ளது என்றும் சமூக நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5) மேலும், மாவட்டங்களில் நடைபெற்ற பயிற்சிகளில், சமையல் செயல்முறை விளக்கம் அளித்த சமையல் கலை வல்லுநர்கள் ஒவ்வொரு மையத்திலும் கலவை இயந்திரம் (மிக்சி) இருந்தால், மேற்படி பணிகளை தினமும் உடனுக்குடன் செய்து சமையலுக்கு பயன்படுத்த ஏதுவாகும் என்று கருத்து தெரிவித்ததாக, சமீபத்தில் நடந்து முடிந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களின் மாநாட்டில் மாவட்ட ஆட்சியர்களால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், புதிய வகை உணவு வகைகளை வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் கருத்தில் கொண்டும், அனைத்து சத்துணவு மையங்களுக்கும் பிற உபகரணங்கள் உட்பட, கலவை இயந்திரமும் (மிக்சி) வழங்கப்படும் என, மாண்புமிகு முதலமைச்சர் 19.12.2012ல் அந்த மாநாட்டில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

6) தற்போது விலையில்லா மிக்சி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கலவை இயந்திரத்தின் (மிக்சி) மதிப்பான ரூ.1,241/– வீதத்தில், 43,787 எண்ணிக்கையிலான சத்துணவு மையங்களுக்கு, தலா ஒன்று வீதம், மொத்தம் ரூ.5.43 கோடி மதிப்பிலான 43,787 கலவை இயந்திரங்களை, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், மாவட்ட வாரியாக ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் கலவை இயந்திரம் (மிக்சி) வழங்க ஆணை வழங்குமாறு சமூக நல இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

7) சமூக நல இயக்குநரின் கருத்துரை போன்றே,காய்கறி புலவு, கலவை சாதம் மற்றும் தக்காளி சாதம் ஆகியவற்றினை தயாரிக்க மசாலாக்கள் அரைக்க வேண்டியுள்ளதால், மொத்தம் 55542 குழந்தைகள் நல மையங்களுக்கு கலவை இயந்திரங்கள் (மிக்சி) வழங்க அரசினை கோரியும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். இருப்பினும், தற்போது மின்வசதி உள்ள குழந்தைகள் நல மையங்களில் மட்டுமே கலவை இயந்திரங்களை உபயோகிக்க இயலும் எனவும், தற்போது 9094 குழந்தைகள் நல மையங்கள் மட்டுமே மின்வசதி பெற்றுள்ளன எனவும், அவற்றிற்கு மட்டும் முதற்கட்டத்தில் கலவை இயந்திரங்களை (மிக்சி) வழங்கலாம் எனவும், எஞ்சிய குழந்தைகள் நல மையங்களுக்கு மின்வசதி ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், எஞ்சிய குழந்தைகள் நல மையங்களுக்கு இரண்டாவது கட்டத்தில் கலவை இயந்திரங்கள் (மிக்சி) வழங்கலாம் எனவும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் தெரிவித்துள்ளார்.

8) சமூக நல இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், முதன்மைச் செயலாளர்/சிறப்பு ஆணையர், ஆகியோர் கருத்துருக்களை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் மதிய உணவு வழங்கப்படும் குழந்தைகளின் நன்மைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகையான உணவுகளை தயாரிப்பதற்கு உதவிடும் வகையில் சத்துணவு மையங்களுக்கும் குழந்தை நல மையங்களுக்கு பின்வருமாறு கலவை இயந்திரங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக, தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகள் 2000ன் படி வாங்கி வழங்க ஆணையிடப்படுகிறது:-

(i) முதற்கட்டம்

| வ. எண். | சத்துணவுத் திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | மையத்திற்கு ஒரு கலவை இயந்திரம்(மிக்சி) ரூ.1241/– வீதம் மொத்த செலவு |
|---|---|---|---|
| 1. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 43787 | ரூ.5,43,39,667/– |
| 2. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 9094(மின் வசதி பெற்றவை) | ரூ.1,12,85,654/– |
| | மொத்தம் | 52,881 | ரூ.6,56,25,321/– |

(ii) இரண்டாம் கட்டம்

| வ.எண். | சத்துணவுத் திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | மையத்திற்கு ஒரு கலவை இயந்திரம் (மிக்சி) ரூ.1241/– வீதம் மொத்த செலவு |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | (54439 – 9094 ) =45345 | ரூ.5,62,73,145/– |
| | மொத்தம் | 45345 | ரூ.5,62,73,145/– |

9) மேலே பத்தி 8(i)ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள 52,881 மையங்களுக்கு முதற்கட்டமாக கலவை இயந்திரங்கள் வழங்க ரூ.6,56,25,321/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தி ஆறு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து முன்னூற்று இருபத்தொன்று மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

10) மேலும், பத்தி 8(ii)ல் தெரிவிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மின் இணைப்பு பெறப்பட்ட பின்னர் இவ்வரசாணையின் அடிப்படையில் அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கான கருத்துருவை இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு சந(ம)சஉதி துறை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11) மேலே பத்தி 9ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் இரண்டு கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

(i) 43787 சத்துணவு மையங்களுக்கான செலவினம் – ரூ.5,43,39,667/–

2236 சத்துணவு –02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 மதிய உணவு பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II மாநிலத் திட்டம் KL–5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 24.00 பொருள்களும், வழங்கலும்
(த.தொ.கு. 2236 02 102 KL2407)

(ii) 9094 அங்கன்வாடி மையங்களுக்கான செலவினம் – ரூ.1,12,85,654/–

2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 மதிய உணவு பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் –KV – அங்கன்வாடி மையங்களுக்கு கருவிகளும் தளவாடங்களும் வழங்குதல் 24.00 பொருள்களும் வழங்கலும்
(த.தொ.கு. 2236 02 102 KV 2402)

12) மேலே பத்தி 9 இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள இக்கூடுதல் செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்பட வேண்டும். முதற்கண் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு, செலவு – பொது-I) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து, இச்செலவினத்திற்கான முன்பணம் பெறுவதற்குரிய படிவத்தில் தேவையான விண்ணப்பங்களை இவ்வாணையின் நகலுடன், நேரடியாக நிதித் (வரவு செலவு, பொது-1) துறைக்கு அனுப்பும்படி சமூக நல இயக்குநர் மற்றும் முதன்மைச் செயலாளர்/சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், இச்செலவினத்தை இறுதி துணை மானியக் கோரிக்கை 2013–2014ல் சேர்த்திட ஏதுவாக உரிய கருத்துருக்களை உரிய தருணத்தில் தவறாமல் அரசின் நிதித் துறைக்கு அனுப்பி வைத்திடுமாறும் மேற்படி துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

13) இவ்வாணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அ.சா.கு.எண்:85/து.செ.(வி.எஸ்) நாள் 18-03-2013 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.2592(இரண்டாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று இரண்டு) மூலம் இசைவை அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்

சமூக நல இயக்குநர், சென்னை– 600 002.
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை – 600 113.



248

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை– 600 010.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை– 600 015.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை–600 002.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 600 009
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை) சென்னை – 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79 மற்றும் மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009
நிதி (சந, வ.செ.பொ.1/ வ.செ.பொ.2) துறை, சென்னை– 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2, ச.ந.7) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

Under Secretary to Government
Social Welfare and Nutritious Meal Programme Department
Secretariat, Chennai-600 009
20/3/13